# உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல்
## ஆண்டறிக்கை 2020/2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0015 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம் |
| செயற்றிட்டக் காலம் | நவம்பர் 2020 - டிசம்பர் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | பார்த்திபன் பரம்சோதி, தில்லைநாதன் கோபிநாத் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம், ஆவணச்சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2021 - LKR 431,270.85 |

உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து 1985 ம் ஆண்டில் இருந்து வெளிவரும் ஒரு முக்கிய பத்திரிகை ஆகும். அவர்களின் அனுமதியுடன் 6,425 பத்திரிகைகள் (issues) இதுவரை நூலக நிறுவனத்தால் எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, அணுக்கப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் விடுபட்ட 8,119 பத்திரிகைகளை ஆவணப்படுத்துவதற்காக இந்தச் செயற்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. உதயன் பத்திரிகைச் சேகரம் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஒரு முக்கிய முதல்நிலை உசாத்துணை வளமாகப் (primary reference resource) பயன்படும்.

தமிழ் மொழி பேசும் சமூகங்களினை ஆவணப்படுத்துகையில், அந்த சமூகங்களின் மத்தியில் இருந்து தமிழ் மொழியிலே வெளியாகிய எழுத்துப் பதிவுகளை ஆவணப்படுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது. எழுத்துப் பதிவுகள் தொடர்பிலே சிந்திக்கையில், பத்திரிகைகளை ஆவணப்படுத்துவது அவசியம். வாசிப்புக் கலாசாரத்திலே, வெவ்வேறு பட்ட சமூகப் பொருளாதாரச் சூழல்களில் இருந்து வரும், மிகவும் அதிகளவான தமிழ் பேசும் மக்களை ஈர்க்கின்ற ஒரு எழுத்துப் பிரதியாகப் பத்திரிகை அமைகின்றது. எனவே தமிழ் பேசும் சமூகங்களின் வாசிப்புக் கலாசாரத்தினைக் கட்டியமைப்பதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் பத்திரிகைகளுக்கு என ஒரு அதி முக்கியத்துவம் வாய்ந்த இடம் இருக்கிறது. அந்த வகையில் நூலக நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களில் இருந்து வெளியாகிய, வெளியாகிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளை ஆவணப்படுத்தும் செயன்முறைகளிலே தன்னை ஈடுபடுத்தி வருகிறது.
உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து மிகவும் நெருக்கடியான ஒரு காலப்பகுதியிலே வெளியாகியது. வடக்குக் கிழக்கிலே இடம்பெற்ற ஆயுத விடுதலைப் போராட்டத்தின் போது மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளைச் சந்தித்து அது வெளியாகியது. இராணுவத்தினராலும், ஆயுதப் போராட்ட இயக்கங்களினாலும் இந்தப் பத்திரிகை பல அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டது. அவ்வாறான பத்திரிகை ஆயுதப் போராட்டத்தினையும், அதிலே பங்கு வகித்த சக்திகளினையும், அவற்றின் வரலாற்றினையும் ஆவணப்படுத்துகையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க பத்திரிகையாக அமைகின்றது.
யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நிகழ்வுகளைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கும் உதயன் பத்திரிகையினை ஆவணப்படுத்துவது முக்கியமாகிறது. யாழ்ப்பாணத்தினதும், வட பிராந்தியத்தின்

ஏனைய பகுதிகளிலும் மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் சடங்குகள், கலைகள், பண்பாடுகள், இலக்கியங்கள் போன்றனவற்றின் உயிர்ப்பு மிக்க வாழ்க்கையினை வெளிக்கொண்டு வந்த ஒரு பத்திரிகையாக உதயன் பத்திரிகை அமைகிறது.

உதயன் பத்திரிகையில் வெளிவரும் விளம்பரங்கள் கூட வட பிராந்தியத்தின் பொருளாதாரத்தினையும், நுகர்வுக் கலாசாரத்தினையும் பற்றி ஆய்வு செய்வோருக்குப் பயன் தரக்கூடியன.

இருபதாம், இருபத்தோராம் நூற்றாண்டுகளிலே வட பிராந்தியத்தில் தமிழ் மொழி மூல ஊடகத்துறையின் வரலாறு, ஊடகக் கலாசாரம், கருத்து வெளிப்பாட்டு முறைகள், கருத்துத் தடுப்புச் செயன்முறைகள், பொதுசன அபிப்பிராய உருவாக்கம் போன்றன பற்றி மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கும் உதயன் பத்திரிகையினை ஆவணப்படுத்துவது அவசியம்.

வடபிராந்தியத்திலே நிலவிய தமிழ் மொழிப் பாவனை, மொழிக் கூறுகள், கேலிச் சித்திரக் கலாசாரம், புகைப்படக் கலாசாரம் போன்றவற்றின் ஆய்வுக்கும் உதயன் பத்திரிகையினை ஆவணப்படுத்துவது அவசியமாகிறது.

பத்திரிகைகள் மக்கள் பற்றியும், சமூகங்கள் பற்றியும் பல்வேறு தரப்பட்ட விடயங்களை வெளிக்கொண்டு வருகின்றன. அவற்றினை வாசிக்கும் போது ஏற்கனவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வரும் கருப்பொருள்களைப் பற்றி மேலும் புதிய விடயங்களை நாம் அறியக் கூடியதாக இருக்கும் அதேவேளையில், அந்த ஆய்வுகளை வேறு என்ன திசைகளிலே முன்னெடுக்கலாம் என்பதனை நாம் கண்டறிய முடியும். அது மட்டுமல்லாமல், பத்திரிகைகள் ஏற்கனவே ஆய்வு செய்யப்படாமல் இருக்கும் விடயங்களை நாம் கண்டறிவதற்கும், புதிய ஆய்வுகளுக்கும் வழிகாட்டக் கூடியன. அந்த வகையிலும் உதயன் பத்திரிகையினை ஆவணப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு முயற்சியாகும்.

இலக்குகளும் நோக்கங்களும்

உதயன் பத்திரிகைளை முழுமையாகத் திரட்டி அவற்றை எண்ணிமப்படுத்தலும், திறந்த அணுக்கத்திற்காக வழங்குதலுமே இச்செயற்றிட்டத்தின் அடிப்படையான நோக்கமாகும். முன்னைய செயற்திட்டங்கள் ஊடாக 6,425 உதயன் பத்திரிகைகள் (issues) ஆவணப்படுத்தப்பட்டன . இந்தச் செயற்திட்டம் ஊடாக 8,119 பத்திரிகைகள் (issues) ஆவணப்படுத்த திட்டமிடப்படுகிறது. செய்யப்பட விருக்கும் பத்திரிகைகள் ஏறக்குறைய 162,380 பக்கங்களைக் கொண்டவையாகும். இது உதயன் பத்திரிகையின் முழுமையான வரலாற்று ஆவணகத் தொகுப்பாக (archival collection) ஆக அமையும் (1985 - இன்று வரைக்கும்). வாசிகசாலை செயற்திட்டம் ஊடாக தற்காலத்தில் வெளியிடப்படும் உதயன் பத்திரிகைகளும் ஆவணப்படுத்தப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழத்துப் பத்திரிகைகள் சேகரங்கள் ஊடாக பத்திரிகைகளில் இருந்து பெறப்படும் தகவல்களின் ஊடாக தமிழ் பேசும் சமூகங்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளுக்கும், தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகளுக்கான தூண்டல்களையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கல்.

வாசகர்களின் மத்தியிலே கடந்த காலம் பற்றியும், வரலாறு பற்றியும் அறிவதற்கான ஆவலினைத் தூண்டுதலும் கடந்த காலம் தொடர்பான அறிவினை வளர்த்தெடுத்தலையும் நோக்கமாகக் கொண்டு இந்தச் செயற்திட்டம் செப்ரம்பர் 2020 இல் தொடங்கப்பட்டது. அதிலிருந்து 2021 டிசம்பர் வரையான காலப்பகுதி வரையான அடைவுகள் பெறப்பட்டன.

அடைவுகள்

.

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட பத்திரிகைகளின் பக்கங்கள் |
|---|---|---|
| | நவம்பர் | 6658 |
| | டிசம்பர் | 3112 |
| | ஜனவரி | 2934 |
| | பெப்ரவரி | 4650 |
| | மார்ச் | 5222 |
| | ஏப்ரல் | 2846 |
| | மே | 2846 |
| | யூன் | 544 |
| | யூலை | 3516 |
| | ஆகஸ்ட் | 4140 |
| | செப்டம்பர் | 3408 |
| | ஒக்டோபர் | 4216 |
| | நவம்பர் | 1288 |
| | டிசம்பர் | 6222 |
| | மொத்தம் | **51602** |

## எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சாவலான காரணியாக அமைந்தது.
- உதயன் பத்திரிகைகளை பட்டியலிடலில் காணப்பட்ட தாமதம்.
- பழைய ஆவணங்களாக காணப்படுவதால் மின்வருடுவதில் தாமதமாதல்.
- A3 மின்வருடி ஒன்று மாத்திரம் காணப்படல். இம்மின்வருடியை விட பத்திரிகைகளின் அளவு பெரிதாகக் காணப்படல். அவற்றை கமறாவில் மின்வருட வேண்டியுள்ளமை.
- எண்ணிமமாக்கும் கருவிகளைத் தொடர்ந்து இற்றைப்படுத்துவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு இருக்கவில்லை.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- எண்ணிமப்படுத்துவதற்கான பட்டியல்கள், பத்திரிகைகளின் எண்ணிக்கை இற்றைப்படுத்தல். .
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.A3 மின்வருடல் கருவிகளை பரிந்துரைத்தல்.
- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் பழைய பத்திரிகைகளை முன்னுரிமை அளித்து மின்வருடல்.
- நூலக நிறுவனத்திடம் இல்லாத பத்திரிகைகளை உதயன் அலுவலகத்தில், பொது நூலகத்தில் பெறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றை தொடருதல்

## பின்னிணைப்புக்கள்

உதயன் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல்